

### கலைமாமணி

# டாக்டர் ஜி. உமாபதி

**நம்பிக்கை என்று சொன்னாலும் உமாபதி என்று சொன்னாலும் தமிழில் இனி ஒரே பொருள் எனும் வகையில் இவருடைய பெயருக்குள் நம்பிக்கை பொதிந்திருப்பது போல் எவருக்கும் தோன்றும்.**

*'உழைப்பே உயர்வு' உண்மை தான். ஆனால், உழைப்பவர்கள் எல்லோருமே உயர்ந்துவிட முடியாது. உழைக்கிறவர்களுள் பலர் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்களே தவிர சாதனையாளர்களாக இருப்பதில்லை. உணவுக்கும், உடைக்கும் மட்டுமே உடலின் வியர்வையை அர்ப்பணிக்கிற சராசரிகளின் நடுவே சாதனையாளர்கள் வந்து போகிறவர்கள் அல்லர். வாழ்ந்து காட்டுகிறவர்கள், வரலாறு படைக்கிறவர்கள். இந்த வரிசையில் எவருக்கும் நினைவுக்கு வருகிறவர் கலைமாமணி டாக்டர் ஜி. உமாபதி அவர்கள். அவரைப்பற்றி*

---

மனத்தில் பதிந்தவர்கள், தொகுதி 1: 23-27.

எண்ணும்போதும், எழுதும் போதும் இதயத்துள் ஒரு வசந்தம் பரவிய சுகத்தை உணர்கிறேன்.

'உழைப்புச் செல்வர்' என்பது அவருக்கு வழங்கப்பட்டிருக்கிற அநேக பட்டங்களில் ஒன்று. உழைப்பும் செல்வமும் ஒன்றுக்கொன்று தொடர்பானவை என்பதை உலகுக்கு உணர்த்திய உமாபதியாருக்கு இப்பட்டம்தான் மிகமிகப் பொருந்துகிற பட்டம். மிக அண்மையில் உழைப்புச் செல்வரின் எழுபத்து மூன்றாவது பிறந்த நாள் விழாவை முன்னின்று நடத்துகிற பெரும்பேறு பெற்றேன். மல்லிகைப் பூவை அள்ளுகிற கைக்கும் மணம் உண்டு என்பது போல் உழைப்புச் செல்வரோடு என் பெயரும் பேசப்பட்டதில் எனக்கு அத்துணைப் பெருமை. விழா நடந்த ராஜா முத்தையா மன்றம் கூட்டத்தால் மட்டுமல்ல, குதூகலமான நெஞ்சங்களாலும் நிறைந்திருந்தது. மாலையில் விழா தொடங்கிய ஐந்து மணிக்கு ஆரம்பித்த மாலை அணிவிப்புகள் விழா நிறைவுற்ற பத்து மணிவரையிலும் தொடர்ந்தன. மலைபோல் மாலைகள், கடல் போல் பொன்னாடைகள்!

அவர் என்ன அரசியல்வாதியா...? எல்லா அரசியல் வாதிகளுக்குமா இத்தனை பெருமை...? மிகப்பெரிய பணக்காரரா? எல்லாப் பணக்காரர்களுக்குமா இத்தனை கௌரவம்...? படித்த மாமேதையா...? எல்லா மேதைகளுக்குமா இத்தனை புகழ்...? மிக உயர்ந்த பதவியா...? எல்லாப் பதவிகளுக்குமா இத்தனை சிறப்பு...? இல்லையே!..

பரந்து விரிந்த நெஞ்சம், பழகுவதில் இனிமை, எதிலும் தெளிவு, எண்ணத்தில் தூய்மை, உண்மை, உழைப்பு, நடிப்பறியா நன்னெஞ்சம், நேர்மை, அதிசிறந்த அணுகுமுறை இவற்றால் வந்த பெயர், பெருமை, புகழ், சிறப்பு, கௌரவம் யாவும் உழைப்புச் செல்வருக்குக் காலம் தந்திருக்கிற கொடை. வாழ்வின் அடித்தளம் அறிந்த இந்தக் கோபுரத்தின் வளர்ச்சியில் எத்தனையோ வரலாறுகள் உண்டு என்பதில் வியந்திருக்கிறேன். நம்பிக்கை என்று சொன்னாலும் உமாபதி என்று சொன்னாலும் தமிழில் இனி ஒரே பொருள் எனும் வகையில் இவருடைய பெயருக்குள் நம்பிக்கை பொதிந்திருப்பது போல் எவருக்கும் தோன்றும். யாரும் செய்யாததைச் செய்ய வேண்டும்.

எவரும் நினையாததை நடத்தித் தீர வேண்டும் என்கிற தொலைநோக்கும் திண்மையும் உமாபதியாரின் எண்ணற்ற அடையாளங்களுள் சில.

தொழிலதிபராக, திரைத்துறை வித்தகராக, எழுத்தாளராக, பத்திரிகையாளராக, பேச்சாளராக, பழுத்த அரசியல்வாதியாக, பண்பட்ட நண்பராக பட்டை தீட்டப்பட்ட பருவயிரம் இவர். இத்தனை பரிமாணங்களை ஒருவரால் எப்படிக் காட்ட முடிகிறது...?

"என்னைப் பொறுத்தவரை எதைச்செய்தாலும் சிறப்பாக, தனித்துவம் மிக்கதாக, முதன்மையானதாகச் செய்யவேண்டும் என்பது என் இளமைக் கால வாழ்வின் லட்சியமாகும்" என்கிற உழைப்புச் செல்வர் தொட்டதெல்லாம் துலங்கி இருக்கிறது. தனித்தன்மை கொண்டு இலங்கி இருக்கிறது. எதையும் முதலில் செய்ய வேண்டும் என்கின்ற முனைப்பே இவரது வெற்றியின் ரகசியம். உதாரணத்திற்கு ஒன்று. அணிகலன்களும், நவமணிகளும் விற்பனையாகும் சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியில் அந்நாளில் அவற்றைச் செய்தித்தாளிலும் வண்ணத்தாளிலும் மடித்துக் கொடுப்பது வழக்கம். "இத்தனை விலையுயர்ந்த மணிகளையும், அணிகளையும் தாளில் மடித்துக் கொடுக்கிறீர்களே... இதற்கென சிறு பெட்டிகள் செய்து தருகிறேன். அதில் வைத்து விற்றுப் பாருங்கள்" என்று கூறியவர் முதலில் கடைகளுக்கு இலவசமாக, பிறகு குறைந்த விலையில், தொடர்ந்து லாபகரமாக விற்று அட்டைப் பெட்டி சகாப்தத்தைத் தொடங்கிய பெருமை இவர்க்கு உண்டு.

1943–இல் தொடங்கிய உமா பேக்கேஜிங் நிறுவனம் அட்டைப் பெட்டிகள் தயாரிப்பில் இன்றைக்கும் தென்னகத்தில் முதலிடம் வகிக்கிறது. 'அட்டைப்பெட்டி உமாபதி' என்று தான் இவரை அந்நாளில் இவரது நண்பர்களும், தொழிலதிபர்களும் அழைப்பார்கள். இப்போதும் இவரது தொலைவரி 'அட்டைப் பெட்டி' என்ற சொல்லாகும். உமா அச்சகம்கூட மிகப்பெரியதாய் வளர்ந்து, நேர்த்தியான ஆப்செட் அச்சகமாக உயர்ந்து நிற்கிறது. 'உமா' இலக்கிய இதழ் இன்றைக்கும் இலக்கிய வாணர்களால் பெரிதும் நினைக்கப்படுகிற நல்ல தரமான இதழ் என்ற புகழ் பெற்றது.

திரைப்படத் துறையில் உழைப்புச் செல்வரின் பங்கு மகத்தானது. சென்னை சாந்தி திரையரங்கம் உமாபதியாரின் கலையுணர்வின் கவினுறு காட்சி. தொடர்ந்து தென்னகத்திலேயே முதன்முதலாக 70 எம்.எம். என்ற அகன்ற திரையினைக் கொண்ட ஆனந்த் திரையரங்கை வழங்கினார். தென்னாட்டிலேயே முதல் சினிமாஸ்கோப் திரைப்படம் என்கிற பெருமைக்கு உரிய 'ராஜராஜ சோழன்' திரைப்படத்தைத் தயாரித்த புகழுக்கு உரியவரும் இவரே. தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகக் குழுவின் துணைத்தலைவராகவும், திரையரங்க உரிமையாளர் சங்க உருவாக்கத்தில் பெரும் பொறுப்பு மிக்கவராகவும் விளங்கியவர்.

ஒரே ஒரு படத்தில் நடித்தும் புகழ் பெற்றுவிட்டார். 'அக்னி நட்சத்திரம்' என்ற திரைப்படத்தில் இவர் நடித்தார் என்பதைக் காட்டிலும் அந்தப் பாத்திரத்தில் வாழ்ந்தார் எனும் அளவு அத்தனை அழுத்தமான பாத்திரமாய் நின்றார். இப்போதும் இவர் எங்கேனும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டால் பலர் இவரைச் சுட்டிக்காட்டி தமக்குள் பேசிக்கொள்வார்கள். 1954–இல் 'லட்சியவாதி' என்ற தேசிய நாடகத்தில் கதாநாயகனாகவும் நடித்திருக்கிறார்.

உழைப்புச் செல்வர் மிகச் சிறந்த சிந்தனையாளர். 'உமா' இதழில் இவர் தொடர்ந்து எழுதிய 'தம்பிக்கு' என்ற கட்டுரைத் தொடர் நம்பிக்கை நாற்றுகளை நாளும் நம் நெஞ்சில் வளர்க்கும். இக்கட்டுரைகள் 'தன்னம்பிக்கை' என்ற தலைப்பில் நூலாக வெளியானபோது பெரிதும் வரவேற்கப்பட்டன. இதன் ஆங்கில மொழியாக்கம் கூட மானுடம் உய்ய ஒரு மாமனிதர் காட்டிய வழியாக விளங்குகிறது. அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் புரவலரான உமாபதியார் அவர்கள், சங்கம் சந்தித்த பல சங்கடங்கள் களைய உதவியிருக்கிறார். இலக்கியக் கூட்டங்களில் இவர் கலந்து கொண்டாலே கூட்டத்தில் ஒரு களையிருக்கும்.

கலை, இலக்கியத் துறையைப் போலவே அரசியலிலும் தம் புகழைப் பதித்துள்ள பெருமை இவர்க்கு உண்டு. கர்ம வீரர் காமராசரின் மீது தணியாத பற்று உடையவர். மிகச்சிறந்த தேசியவாதியான உமாபதியார் தமிழக எல்லை மீட்புப்

போராட்டத்தில் ம.பொ.சி. அவர்களுக்குத் துணையிருந்து, தோள் தந்து கலந்து கொண்டிருக்கிறார். பழுத்த தேசியவாதியான இவர் வேற்றுக் கட்சியினரும் விரும்புகிற பண்பாளர். கலைஞர் இவரைத் தம் ‘கள்ளக் காதலி’ என்று கூட விளையாட்டாகக் கூறுவார்.

எவரையும் ஈர்க்கிற தோற்றப் பொலிவு இவர்தான் பெரிய மனிதர் என்று சொல்ல வைக்கும். தோற்றத்தில் மட்டுமல்ல, பேச்சிலும், பண்பிலும் கூடப் பெரிய மனிதர் இவர். உழைப்புச் செல்வரின் அறிமுகத்தை எனக்கு அருளியவர் கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்கள். சரியாகத் திட்டமிடுதல், செம்மையாகத் திட்டம் வகுத்துத் தருதல், மிக நேர்த்தியாக எதையும் அணுகுதல், முறையாக எதையும் செயற்படுத்துதல் போன்ற நிர்வாகத் திறமைகளை இவரிடம் கண்டு, பயன் பெறுகிறவன் நான்.

நல்ல விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்காகவே நாளும் இவரைக் கண்டுவரத் தோன்றும். அலுவலகம், பொதுவாழ்க்கை, இலக்கியம், நண்பர் வட்டம், குடும்பம் என்றெல்லாம் நேரத்தோடு போராடிக் கொண்டிருக்கிற எனக்கு அய்யாவை அடிக்கடி காண முடிவதில்லை என்கிற ஏக்கம் இருந்தாலும் அவ்வப்போது அவரே என்னைத் தொலைபேசியில் அழைத்து நல்ல விஷயங்களைச் சொல்லுவார். என்னுடைய ‘என் பக்கம்’ கட்டுரைகள் இவரைத் தம் பக்கம் ஈர்த்துள்ளன. ‘கவிதை உறவு’ இதழ் கிடைத்த அன்றே என்னை அழைத்து மனந்திறந்து பாராட்டுவார். தம்முடைய கருத்துகளையும் கூறுவார். எனக்கும் அடுத்த கட்டுரைக்கு விஷயம் கிடைக்கும்.

அய்யாவைப் போலவே அன்னையார் இருவரும், அவர்தம் பிள்ளைகளும், பேரர்களும், உறவினரும், நண்பர்களும் என் மீது அளப்பரிய அன்பும், பற்றும் வைத்திருக்கிறார்கள், நான் அவர்கள் வீட்டுப் பிள்ளை என்பதைப் போல. அத்தனை அழுத்தமான நேயமும், நட்பும் நானும் வைத்திருக்கிறேன். கலைமாமணி உமாபதியார் அவர்கள் இப்போது நம்மோடு இல்லை. காலம் அவர்களை நம்மிடமிருந்து பிரித்த போதும் நினைவுகள் நாளும் வாழும்.

❑